மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை :- **திருமதி. சி. கலைவாணி**, B.A., L.L.B.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவராண்டு 2052 ஸ்ரீ பிலவ வருடம் சித்திரைத் திங்கள் 8 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 32/2021-ல்**

**அசல் வழக்கு எண். 13/2019**

1. ஜி. ஜோதி
2. ஜெ. ராஜசேகர் ...மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

// **எதிர்**//

ராஜசெல்வி ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு 16.04.2021ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. V. ரவிச்சந்திரன் அவர்களும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. S.சம்பத்குமார், திருமதி.S.விஜி, செல்வி. S. மேகலா ஆகியோர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் காலத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்யாததை மன்னித்து இம்மனுவுடன் மனுதாரர் தரப்பில் தாக்கல்செய்யப்பட்டுள்ள ஆவணங்களை ஏற்றுக்கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி உ.ந.ச. கட்டளை 8 விதி 1A(3)-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :-**

மனுதாரர் அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி. அசல் வழக்கானது, வழக்குரையில்

காணப்பட்டுள்ள சொத்துக்களைப் பொறுத்து மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படாமல் விடுபட்டுபோய்விட்டது. தாவா சொத்திற்குரிய வருவாய் துறை ஆவணங்கள் தாலுக்கா அலுவலகத்தில் சான்றிட்ட நகல் பெற்று தாக்கல் செய்வதில் கால தாமதம் ஏற்பட்டு விட்டது. வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ காலத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்யாமல் இருக்க வில்லை. எனவே, தற்போது தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை ஏற்று அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>** :-

இ.ம.எண்.36/2019-ல் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்யாமல் தற்போது பொய்யான காரணங்களை கோரி ஆவணங்களை தாக்கல் செய்வதிலிருந்து வழக்கினை காலதாமதப்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யும் தாவா சொத்துக்குரிய அடங்கல் பதிவேடு மற்றும் கிஸ்தி ரசீதுகள் அனைத்தும் வழக்கிற்கு பின் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டு, தாவா சொத்தினை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 8 வது ஆவணமானது 06.01.1990, 1ம் பிரதிவாதிக்கும், வாதியின் பாட்டி நாகம்மாளுக்கும் இடையில் ஏற்பட்ட கிரய உடன்படிக்கை மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட போலி ஆவணம் ஆகும். கிரய சாசன ஒப்பந்த பத்திரம் சட்டப்படி பதிவு செய்யப்படாதது

என்பதாலும் இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், அசல் வழக்கானது, வழக்குரையில் காணப்பட்டுள்ள சொத்துக்களைப் பொறுத்து மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு பிரதிவாதிகளால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு ஆவணங்கள் தாக்கல் செய்யப்படாமல் விடுபட்டுபோய்விட்டது என்றும், தாவா சொத்திற்குரிய வருவாய் துறை ஆவணங்கள் தாலுக்கா அலுவலகத்தில் சான்றிட்ட நகல் பெற்று தாக்கல் செய்வதில் கால தாமதம் ஏற்பட்டு விட்டது என்றும், வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ காலத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்யாமல் இருக்க வில்லை என்றும், எனவே, தற்போது தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை ஏற்று அனுமதி வழங்கி உத்தரவிடவேண்டும் என்றும் வாதிட்டார்.

5. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், இ.ம.எண்.36/2019-ல் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்யாமல் தற்போது பொய்யான காரணங்களை கோரி ஆவணங்களை தாக்கல் செய்வதிலிருந்து வழக்கினை காலதாமதப்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யும் தாவா சொத்துக்குரிய அடங்கல் பதிவேடு மற்றும் கிஸ்தி ரசீதுகள் அனைத்தும் வழக்கிற்கு பின் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டு, தாவா சொத்தினை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 8 வது ஆவணமானது 06.01.1990, 1ம் பிரதிவாதிக்கும், வாதியின் பாட்டி

நாகம்மாளுக்கும் இடையில் ஏற்பட்ட கிரய உடன்படிக்கை மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட போலி ஆவணம் என்றும், கிரய சாசன ஒப்பந்த பத்திரம் சட்டப்படி பதிவு செய்யப்படாதது என்பதாலும் இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

**6. இம்மனுவில் தீர்வுக்காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

**<u>பிரச்சினை</u>:-**

**1.** இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**2.** அசல் வழக்கானது தாவா சொத்தில் வாதிக்குள்ள அமைதியான அனுபோகத்தினை, பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, எந்த காலத்திலும், எந்தவிதத்திலும், அத்துமீறி நுழைந்து, ஆக்கிரமித்து தடைதகராறுகள் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**4.** இரு தரப்பு வாதம் மற்றும் வழக்காவணங்களை பரிசீலிக்கையில், அசல் வழக்கானது மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, பிரதிவாதிகளால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, விசாரணைக்காக போடப்பட்டுள்ள நிலையில், இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவினைப் பொறுத்து எதிர்மனுதாரர் ஆட்சேபணை தெரிவித்துள்ளபோதிலும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எந்தவித இழப்பும் ஏற்படபோவதில்லை. மேலும், ஆவணங்களின்

நம்பகத்தன்மை குறித்தும், அந்த ஆவணங்களைப்பொறுத்து குறுக்கு விசாரணை செய்வதற்கு எதிர்மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு உள்ளது. எனவே, நீதியின் பால் இம்மனுவினை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவில்,** இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் உண்மை தன்மை, நம்பகத்தன்மை மற்றும் ஏற்கும் தன்மைக்கு உட்பட்டு இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று ( 21. 04. 2021 அவையறியப் பகரப்பட்டது.

S/d. C. Kalaivani.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்** :-

**இருதரப்பிலும்** : இல்லை

S/d. C. Kalaivani.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.